புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com





ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மார்ச் 21, 2024 • புரட்சி 24 • முழக்கம் 10 • விலை ரூ.3.00


## நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு

# ஈரோடு செயலவைக் கூட்டத்தில் தீர்மானம்

**21.03.2024 வியாழன் அன்று ஈரோடு, கே.கே.எஸ். கே மகாலில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற கழக செயலவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

இந்தியாவில் நடப்பது அரசியல் போராட்டம் அல்ல: ஆரிய திராவிடப் போராட்டம் என்றார் பெரியார். நாடு சுதந்திரம் பெற்றது என்று அறிவிக்கப்பட்ட போது இது சுதந்திரம் அல்ல; பார்ப்பன பனியாவுக்கு அதிகாரத்தை மாற்றும் நாள் என்பதே பெரியாரின் நிலைப்பாடு. பெரியார் எச்சரித்த அந்த போராட்டம் தான் எதிர்வரும் தேர்தல் களத்தில் மைய கருத்தியலாக உருப்பெற்று இருக்கிறது. ஆரியம், சனாதனம் என்ற முகமூடியுடன் களத்திற்கு வந்துள்ளது. திராவிடம் தனது உண்மையான அடையாளத்தோடு சனாதனத்தை எதிர்கொண்டு வருகிறது. திராவிட சனாதன (பார்ப்பனியம்) முரண்பாடுகள் கூர்மை அடைந்து வருகின்றன. கோடான கோடி விளிம்பு நிலை இந்து மக்கள் சனாதனம் சுமத்திய சுரண்டல் அநீதிகளுக்கு பலிகடாவாக்கப்பட்டனர். இதை நேர் செய்வதற்கு சமூக நீதி, அதிகார பங்கீடு, சுயமரியாதை, சமத்துவம், பெண்ணுரிமை, மாநில உரிமை, மொழி ஆதிக்க எதிர்ப்பு, வேத மதம் சுமத்திய பண்பாட்டு இழிவுகளுக்கு எதிர்ப்பு என்ற கொள்கைகளை திராவிடம் தனது கொள்கை கவசம் ஆக்கிக் கொண்டு வாளும் கேடயமாக களத்தில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி இந்தியாவுக்கே வழிகாட்டி வருகிறது. ஒரு காலத்தில் பார்ப்பனிய பிடிக்குள் சிக்கியிருந்த காங்கிரஸ் கட்சி வரலாறுகளில் இருந்து பெற்ற பாடங்களை கருத்தில் கொண்டு திராவிட கொள்கைகளோடு நெருங்கி வருவது திராவிடத்திற்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்காத காரணத்தால் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார். மண்டல் பரிந்துரையை காங்கிரஸ் கட்சி அமல்படுத்த மறுத்தது. அதே காங்கிரஸ் இப்போது ஜாதிவாரி கணக்கெடுப்பு வேண்டும், இட ஒதுக்கீடு 50% மேல் இருக்கக்கூடாது என்ற உச்சவரம்பு நீக்கப்பட வேண்டும், விளிம்பு நிலை பெண்களுக்கு வருடம் ஒரு லட்சம் ரூபாய் உதவித்தொகை என்று தனது கொள்கைப் பாதையை திராவிட இயக்க திசைவழியில் மாற்றிக் கொண்டுள்ளது. நீட் எதிர்ப்பிலும் மாநில உரிமைகளிலும் காங்கிரஸ் தனது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டுள்ளதோடு ஆர்எஸ்எஸ் தத்துவத்தை கடுமையாக எதிர்த்து வருகிறார் ராகுல் காந்தி. பம்பாயில் நடந்த நீதி பயண நிறைவு விழாவில் பேசிய ராகுல் காந்தி இந்து தர்மத்தில் ‘ஒரு அதிகார மையம்’ சக்தியுடன் செயல்படுகிறது. அதன் முகமூடியாக மோடி செயல்படுகிறார். எங்களுடைய போராட்டம் பாஜக என்ற கட்சிக்கு எதிரானது அல்ல; அந்த அதிகாரத்துக்கு எதிரானது என்று பிரகடனம் செய்திருப்பதை சுட்டி காட்டியாக வேண்டும்.

தமிழ்நாட்டில் அடுக்கடுக்கான சாதனைகளை நிகழ்த்தி வரும் திராவிட மாடல் ஆட்சி பல மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. சமூகத்தின் சரி பாதி எண்ணிக்கையில் உள்ள பெண்களுக்கான விடுதலைக்கு உரத்து குரல் கொடுத்த தலைவர் பெரியார், சுயமரியாதை இயக்க மாநாடுகளில் பெரியார் நிறைவேற்றிய தீர்மானங்கள் திராவிட ஆட்சியில் செயல்வடிவம் பெற்றன. பெண்களுக்கான குடும்ப சொத்துரிமைக்கு முதன்முதலாக சட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார். அதற்குப் பிறகுதான் நாடாளுமன்றமே அதை சட்டமாக்கியது. நீதிக்கட்சி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சத்துணவு திட்டம், காமராசர் ஆட்சியில் மதிய உணவு திட்டமாகி எம்ஜிஆர் ஆட்சியில் சத்துணவு திட்டமாக உருவெடுத்து கலைஞர் ஆட்சியில் மேலும் செம்மைப் படுத்தப்பட்டது. அந்த திட்டத்தை உச்ச நீதிமன்றமே ஏற்றுக்கொண்டு அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்த பரிந்துரைத்தது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அமல்படுத்திய பெண்கள் கட்டணமில்லா பேருந்து பயணம், மகளிர் உரிமைத்தொகை, கல்லூரிக்கு செல்லும் அரசு பள்ளி மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் திட்டம், காலை சிற்றுண்டி திட்டம், கட்சிகளைக் கடந்து பல்வேறு மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மருத்துவ உயர்ப்பட்ட படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை ஒன்றிய பாஜக ஆட்சி மறுத்தபோது சட்டப் போராட்டம் நடத்தி அனைத்து மாநிலங்களுக்கும் அந்த உரிமையைப் பெற்று தந்த பெருமை தமிழக முதல்வருக்கு உண்டு. பழங்குடி மக்கள் தங்களுக்கான அரசு திட்டங்களின் பயன்களை பெற முடியாமல் தவித்தனர். மத்திய அரசு திட்டங்களுக்கும் மாநில அரசு திட்டங்களுக்கும் தனித்தனியாக சட்டங்கள் இருந்ததால் அதை ஒரே சட்டமாக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இப்போது அதை நிறைவேற்றி பழங்குடியினர், சீர் மரபினர் நீண்ட நாள் கோரிக்கையை தீர்த்து வைத்துள்ளார் தமிழக முதல்வர். நீண்ட நாள் முடங்கி கிடந்த அரசு தேர்வாணையம் இப்போது இலட்சக்கணக்கான பதவிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி தேர்வுகளை நடத்துகிறது. தொழில் வளம் பெருக அந்நிய முதலீடுகள் தமிழகத்தில் கொண்டு வந்து சேர்க்க முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கியதோடு ஒடுக்கப்பட்ட சமூகத்து பெண்களையும் ஓதுவார்களாக நியமித்து சமுதாயப் புரட்சி நிகழ்த்தியுள்ளது. பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாகவும், அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாகவும் அறிவித்துள்ளது. இவை அனைத்துமே சனாதனத்துக்கு எதிரான திராவிடத்தின் சாதனைகள்.

பத்தாண்டு கால பாஜகவின் ஒன்றிய ஆட்சி என்ன செய்தது. அதன் தாய் சபையான *RSS* பேசும் இந்து ராஷ்டிரத்தை நோக்கி நாட்டை இழுத்து செல்கிறது. மதச்சார்பின்மையை குழி தோண்டி புதைக்கிறது. இவர்கள் பேசும் இந்து ராஷ்டிரம் என்பது இந்து மதத்தில் அடக்கப்பட்டுள்ள கோடான கோடி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கு ஆனது அல்ல; மாறாக பார்ப்பனிய மேலாதிக்கத்தை நிலை நிறுத்தும் இந்துராஷ்டிரமாகும்.

அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மதச்சார்பற்ற நாட்டை, மதவாத நாடாக மாற்ற வேண்டும் என்றால் அதற்கு ஜனநாயகமும் ஜனநாயக நிறுவனங்களும் தடையாக நிற்கின்றன. எனவே அந்த அமைப்புகளை சீர்குலைத்து ஒற்றை சர்வாதிகார தலைமையின் கீழ் கொண்டுவரும் உறுதியான முடிவை நோக்கி பாஜக காய்களை நகர்த்துகிறது. அதன் செயல்பாடுகளைக் கொண்டு இதை உறுதிப்படுத்த முடியும்.

முப்படைக்கும் மூன்று தளபதிகள் இருந்ததை மாற்றி ஒரே தளபதியின் கீழ் கொண்டு வந்து விட்டனர். நாடு முழுவதும் ஒரே கட்டத்தில் தேர்தல்; நாடு முழுவதும் ஒரே கல்விக் கொள்கை; ஒரே வரிக் கொள்கை; நாடாளுமன்றம், நீதிமன்றம், தேர்தல் ஆணையம், அரசு நிறுவனங்களின் கட்டமைப்புகள் ஆகியவற்றின் சீர்குலைப்பு, பொதுத்துறை நிறுவனங்களை ஒழித்து பார்ப்பனியத்திற்கு சேவை செய்யும் அதானி, அம்பானிகள் இடம் கையளித்தல், அமலாக்கத்துறை, புலனாய்வுத் துறை, வருமானவரித் துறைகளை எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கும் தொழில் நிறுவனங்களை மிரட்டி கோடி கோடியாக கட்சிக்கு நிதி திரட்டவும் பயன்படுத்துதல், ஊடகங்களை மிரட்டி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல், பணிய மறுக்கும் ஊடகவியலாளர்களை அடக்குமுறை சட்டத்தில் பொய் வழக்குகளைப் போட்டு சிறையில் தள்ளுதல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களைப் புறக்கணித்தல், எம்எல்ஏக்களை விலைக்கு வாங்குதல், குடியுரிமை சட்டத்தில் மத பாகுபாடுகளை திணித்தல், இந்தியாவின் அடையாளம் இந்து மதம், இந்தியாவின் ஒரே கடவுள் ராமன் என்ற மதவெறி பிம்பத்தை கட்டமைத்தல், சனாதன பார்ப்பனீயத்திற்கு உடன்படாத பகுத்தறிவாளர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த நெறியாளர்களை இந்து விரோதிகளாகவும், தேச விரோதிகளாகவும் சித்தரித்தல் போன்ற அடுக்கடுக்கான அடக்குமுறைகள் ஏவி விடப்பட்டு வருகின்றன. சர்வதேச நிறுவனங்கள் இந்தியாவின் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், அடக்குமுறை கொள்கைகள், வெறுப்புப் பேச்சுகளை அம்பலப்படுத்தினாலும் நாடு வளர்ந்து வருகிறது என்று உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை கட்டமைத்து வருகிறது. எதிர்க்கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் ஆளுநர்கள் பாஜகவின் கைப்பாவையாக மாறி சட்ட விரோதமாக ஆட்சிகளை முடக்கி செயல்பட விடாமல் தடுத்து வருகிறார்கள். மாநில அரசின் சட்டங்களுக்கு ஒப்புதல் தருவதில்லை. உயர்கல்வி நிறுவனங்களில், ஒன்றிய ஆட்சி அலுவலகங்களில், அமைச்சரவை செயலகங்களில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டில் பாதி அளவு கூட நிரப்பப்படவில்லை. கோரிக்கைகள் எதுவும் முன் வைக்காமலேயே உயர் சாதி ஏழைகளுக்கு நான்கே நாட்களில் தனி இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. பிரதமர் அலுவலகத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அதிகாரி ஒருவர் கூட இல்லை என்று அரசு அறிவித்த புள்ளி விவரங்களே கூறுகின்றன.

இந்தியாவில் ஒரே முகம் மோடி மட்டுமே என்ற பிம்பம் கட்டமைக்கப்பட்டு ஒற்றை சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை படுகுழியில் தள்ளும் திட்டத்தோடு தேர்தல் களத்திற்கு பாஜக வந்திருக்கிறது. பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அஇஅதிமுக அறிவித்தாலும் பாஜகவின் மக்கள் விரோத சனாதன கொள்கையோடு கட்சி நெருக்கமாகவே தன்னை அடையாளப்படுத்தி வருகிறது.

இப்போதும் மோடியை, பாஜகவை விமர்சிப்பதைத் தவிர்க்கிறது. பாஜகவின் தமிழ்நாட்டு தலைவராக இருக்கும் அண்ணாமலையை சட்டமன்றத் தேர்தலில் தனக்கு எதிராக முதல்வர் ஆக்கும் முயற்சிகள் நடப்பதால்தான் அது பாஜக எதிர்ப்பு என்ற நாடகத்தை அரங்கேற்றி உள்ளது. தேர்தலுக்குப் பிறகு மோடி ஒருவேளை பிரதமராக வந்துவிட்டாலும் எதிர்ப்போம் என்று கூறுவதற்கு இவர்கள் தயாராக இல்லை .

நாடு எதிர் நோக்கி உள்ள இந்த ஆபத்தான சூழ்நிலையில் பெரியார் தந்த கொள்கை வெளிச்சம் நமக்கு தெளிவான வழிகாட்டி வருகிறது. சனாதனத்தை வீழ்த்தி திராவிடத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் நமக்கு உண்டு. பாரதமா? இந்தியாவா? என்ற கேள்விகள் எழும்போது பாரதம் என்ற சனாதன அடையாளத்தை எதிர்க்கும் இந்தியா கூட்டணியின் பக்கம் தான் நாம் நிற்க வேண்டும். அதுவே பெரியாரிய பார்வை என்ற உறுதியான முடிவிற்கு இந்த செயலவை வந்துள்ளது.

ஆரிய, திராவிடப் போராட்டத்தின் வரலாற்று தொடர்ச்சியாக நடக்கும் இந்த தேவ, அசுரப் போராட்டத்தில் திராவிடர் என்ற அசுரர் ஆகிய நாம் உறுதியோடு சனாதன ஆரியத்தை எதிர்த்து அணி திரள வேண்டும் என்று முடிவு செய்கிறது. இக்கருத்தியலை மக்கள் சந்திப்பு வழியாக ஒவ்வொரு தோழர்களும் தேர்தல் பரப்புரையாக கொண்டு செல்வதில் முனைப்பு காட்ட வேண்டும் என்றும், இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு தனித்துவமாய் பெற்றுவரும் முன்னேற்றங்களை ஒரு பக்கம் நிதிப் பங்கீடு பாகுபாட்டாலும், மறு பக்கம் ஆளுநரின் அடாவடி செயல்பாடுகளாலும் தடுத்து வடநாட்டைப் போல தமிழ்நாட்டையும் மாற்ற துடிக்கும் சதிகார கூட்டத்தினருக்கு பாடம் கற்பிக்கும் வகையில் தமிழ்நாட்டு மக்களும் இவற்றை மனதில் கொண்டு தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் திராவிடர் விடுதலைக் கழகம் வேண்டுகோள் விடுக்கிறது.

# காங்கிரசின் வாக்குறுதிகளை வரவேற்போம்!

தமிழ்நாட்டில் ஒரு கோடிக்கும் அதிகமான பெண்களுக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாயை 'திராவிட மாடல்' திமுக அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளில் பின்பற்றப்படும் இத்தகைய திட்டம் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டது. நேரடியாக மக்களிடத்தில் பணத்தை வழங்குவதன் மூலம் கிராமப்புற பொருளாதாரம் தூண்டி விடப்பட்டு, பணவீக்கம் கட்டுக்குள் வைக்கப்படுகிறது என்றும், சாமானிய மக்களின் சமூகப் பொருளாதார ஏற்றத்துக்கு தூண்டுகோலாக இருக்கிறது என்றும் இருக்கிற பொருளாதார அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆனால் பாஜகவில் இருக்கும் நடிகை குஷ்பு, இத்திட்டமே பிச்சை போடுவது என மிக அநாகரீகமாகப் பேசி, மக்களிடத்தில் எதிர்ப்பைப் பெற்றிருக்கிறார். ஒரு திட்டம் சிறப்பாக இருந்தால் மட்டுமே அதைப் பார்த்து மற்ற மாநிலங்களிலும் பின்பற்றுவார்கள். தமிழ்நாடு அரசின் இந்தத் திட்டத்தை டெல்லி, கர்நாடகா போன்ற அரசுகளும் செயல்படுத்துவதாக அறிவித்துள்ளன. சில மாநிலங்களில் பாஜகவே இதை காப்பியடித்து தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருக்கிறது. அதையும் 'பிச்சை' என்று சொல்ல நடிகை குஷ்புவுக்கு தைரியம் இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

தற்போது இதேபோன்றதொரு திட்டத்தை காங்கிரஸ் கட்சியும் வாக்குறுதியாக அறிவித்திருக்கிறது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால், நாடு முழுவதும் உள்ள ஏழைக் குடும்பப் பெண்களுக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்குவோம் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்திருக்கிறது. அதுமட்டுமின்றி ஒன்றிய அரசுப் பணிகளில் மகளிருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவோம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதுவும் தமிழ்நாட்டில் திமுக அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டமாகும்.

நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் சாவித்ரிபாய் பூலே பெயரில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களின் ஊதியத்தை இரட்டிப்பாக்குதல், பெண்களின் உரிமைகள் குறித்து கற்பிக்கவும், அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கவும் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சட்ட ஆலோசகர் நியமனம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த வாக்குறுதிகளை காங்கிரஸ் கட்சி அறிவித்திருக்கிறது. பாராட்டத்தக்க வாக்குறுதிகள் இவை, வரவேற்போம்.

## சேலத்தில் மோடிக்கு கருப்புக் கொடி

இன்று 19.03.2024 சேலத்தில் தேர்தல் பிரச்சார கூட்டத்திற்காக வருகை தந்த பிரதமர் மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் கருப்பு கொடி காட்டி போராட்டம் நடத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட செயலாளர் மோகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பெரியார் பெருந்தொண்டர் இனியன் பத்மநாபன் காலமானார்



திருச்சி : பெரியார் பெருந்தொண்டரும், ஈரோடு மாவட்டக் கழக ஆலோசகருமான அய்யா இனியன் பத்மநாபன் (97) வயது முதிர்வினால் 15.03.2024 அன்று முடிவெய்தினார். அவரது உடல் திருச்சி மாவட்டம் மணப்பாறையில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டிருந்தது. அய்யாவின் உடலுக்கு ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எழிலன், கிருட்டிணன், பிரபு, திருப்பூர் சங்கீதா, தனபால், முத்து ஆகியோர் கழகக் கொடியைப் போர்த்தி இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

அவரது உடலைகழகப்பெண்தோழர்களே சுமந்து சென்றனர்.பின்னர் எந்தவித மூட சடங்குகளுமின்றி அவரது உடல் எரியூட்டப்பட்டது.

இறுதி நிகழ்வில் மணப்பாறை பாலசுப்பிரமணியம், வையம்பட்டி ஒன்றியப் பொறுப்பாளர் - துரை காசிநாதன், திமுக தலைமைக் கழக சொற்பொழிவாளர், திராவிடர் கழக நகரச் செயலாளர் சி.எம்.எஸ்.ரமேஷ், விசிக நகரச் செயலாளர் ஆனந்த் மற்றும் குடும்பத்தினர், உறவினர்கள் திரளாக கலந்து கொண்டு அய்யாவின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

## நான் கேரண்டி

என் மீது பாசத்தைப் பொழியும் தமிழ் மக்களே! உங்களுக்கு நான் கேரண்டி தருகிறேன். ஒன்றல்ல; இரண்டல்ல; வண்டி வண்டியாக....



- 'நீட்'டை திரும்பப் பெற மாட்டேன் என்பதற்கு நான் கேரண்டி
- வெள்ளம் வந்தால் உங்களை திரும்பி கூட பார்க்க மாட்டேன் என்பதற்கு நான் கேரண்டி
- வெள்ள நிவாரண நிதி ஒரு பைசா கூட தர மாட்டேன் என்பதற்கு நான் கேரண்டி
- மெட்ரோ ரயில் திட்டமா? எங்கள் நிதிநிலை அறிக்கையில் ஒப்புதல் தந்தார்களா? கவலைப்படாதீர்கள். அதற்கு நிதி ஒதுக்காமல் பார்த்துக் கொள்வதற்கு நான் கேரண்டி
- மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை நிச்சயம் வராது. இப்போது அடிக்கல் நாட்டு விழா நடத்தியிருப்பது ஒரு நாடகம். கவலைப்படாதீங்க, அடுத்தக்கல்லு வராமல் பார்த்துக் கொள்வதற்கு நான் கேரண்டி
- கிராமப்புற வேலைத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை முழுமையாக வழங்காமல் முடக்கிப் போடுவதற்கு நான் கேரண்டி
- அமலாக்கத்துறை, புலனாய்வுத்துறை, வருமான வரித்துறைகளை எங்களை எதிர்ப்பவர்களுக்கு எதிராக மட்டுமே ஏவி விடுவோம். இதற்கு நான் கேரண்டி.
- மருத்துவ, பொறியியல் படிப்புகளில் கிராமப் புற மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீட்டை நீங்கள் கொண்டுவந்த போது பதறிப் போனேன். ஆளுநர் புரோகித்திடம் ஒப்புதல் தர வேண்டாம் என்று உத்தரவிட்டு தடுத்தோம். அப்படியும் எங்களை மீறி அமுலுக்கு வந்துவிட்டது. நம்புங்கள், அந்த இட ஒதுக்கீட்டை ஒழித்தே தீருவோம், இதற்கு நான் கேரண்டி.
- நீங்கள் உங்கள் செலவில் நடத்தும் மருத்துவக் கல்லூரிகளில் எங்கள் கோட்டாவை பறித்துக் கொண்டு இட ஒதுக்கீடே இல்லாமல் நிரப்புவோம். இதற்கும் நான் கேரண்டி. உச்சநீதிமன்றம் போய் உங்கள் முதல்வர் ஸ்டாலின், நாங்கள் மறுத்த பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை மீண்டும் கொண்டுவந்துவிட்டார். கொடுமையினும் கொடுமை, இதை ஒழிப்பதற்கு 'ராமபிரான்' சத்தியமாக நடவடிக்கை எடுத்தே தீருவோம். அதற்கு நான் கேரண்டி.
- தமிழ்நாட்டு அரசுக்கு தெரியாமல் ரகசியமாக, தமிழ்நாட்டு மக்களுக்கு நேரடியாக பலத்திட்டங்களை தந்திருக்கிறோம் என்று வாய் கூசாமல் பொய் பேசுவேன். நாங்கள் தரும் திட்டங்களை உங்கள் மாநில ஆட்சி அமுல்படுத்தவில்லை என்று துணிவோடு பொய்களை அவிழ்த்துவிடுவேன். அப்படி வீரதீரத்துடன் பொய்களை அவிழ்த்துவிடும் துணிச்சல் 56 அங்குல மார்பு கொண்ட எனக்கு மட்டுமே உண்டு. அதற்கு நான் முழு கேரண்டி.
- பெண்களுக்கு உங்கள் ஆட்சி தரும் திட்டங்களை, உரிமைகளை 'இலவசம்' என்று கேலிப் பேசுவேன். அதே திட்டங்களை மாநில தேர்தலுக்காக எங்கள் கட்சியின் அறிக்கையில் உறுதி கூறி வாக்கு கேட்போம். இந்த இரட்டை வேடத்தில் இருந்து பின்வாங்கமாட்டேன் என்பதற்கு நான் கேரண்டி.
- ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அந்த கட்சியை உடைத்து சிதைத்து, மிரட்டி எங்கள் கட்சிக்குள் விழுங்கி ஏப்பம் விட திட்டமிட்டு காய்களை நகர்த்தினோம். பிறகு ஜெயலலிதாவை புகழ்ந்து பேசி அதிமுகவினர் காதில் பூசுற்ற ஆரம்பித்துள்ளோம். இந்த 'தில்லுமுல்லு, திருட்டுத்தனங்களுக்கு எங்களால் மட்டுமே கேரண்டி தர முடியும்.
- ஆளுநர் ரவி பாஜகவின் பேச்சாளராக, ஆர்.எஸ்.எஸ் தூதுவராக உறுதியாக செயல்படுவார். பதவியை விட்டு ஓடும்வரை இருப்பார் என்பதற்கு நான் கேரண்டி.
- இன்னும் எவ்வளவோ கேரண்டிகள் கைவசம் உண்டு; 'வாரண்டி' இல்லாத கேரண்டி.
- வாங்க வாங்க வாக்களித்து எங்கள் கேரண்டிகளை உறுதிப்படுத்துங்க

'பாரத் மாதா கி ஜே, ஏமாளி டமிழர்களே'

கோடங்குடி மாரிமுத்த

## வினா விடை

- சிவன், பிரம்மா, விஷ்ணு மூதேவர்களின் ஆசியோடு மூன்றாவது முறையாக பிரதமர் பதவியை ஏற்க போகிறேன். **– மோடி**

**பதவி ஏற்புக்கும் குடியரசுத் தலைவரை புறக்கணிக்க முடிவு செய்துவிட்டீர்களா?**

- தேர்தல் பத்திரம்; பாஜகவை கண்டிக்காமல் எடப்பாடி மௌனம் **– செய்தி**

**மோடியை ஆதரித்தே பழக்கப்பட்ட நாங்கள் மௌனம் சாதிப்பது கடுமையான எதிர்ப்பு தான். நாங்கள் பனங்காட்டு நரி, பயப்படாமல் மௌனம் இருப்போம்.**

- 'நிரபராதி' என்று அறிவிக்கப்படாததால் பொன்முடிக்கு அமைச்சராக 'பதவி பிரமாணம்' செய்து வைக்க மாட்டேன் **– ஆளுநர் ரவி**

**சேலம் பெரியார் பல்கலை துணைவேந்தர் ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டாலும். அவரை பதவியில் இருந்து நீக்க மாட்டேன். அம்புட்டு நேர்மைக்காரன் நான்.**

- தேர்தல் பத்திர ஊழல் வழக்கை விசாரிக்க தனி ஆணையம் அமைக்க வேண்டும் **– காங்கிரஸ் கோரிக்கை**

**சும்மா இருங்க… மோடி தனி ஆணையம் அமைத்து, அதற்கு நிர்மலாவை தலைவராக்கி விடுவார்.**

- ஆயிரம் ரூபாய் பிச்சை போடுவதால் பெண்கள் திமுகவுக்கு ஓட்டு போடமாட்டார்கள். **– குஷ்பு**

**ஆனால் மகளிர் ஆணைய உறுப்பினர் பதவியை 'பிச்சை'யாக போட்டால், குஷ்பு பாஜகவுக்கு 'ஜே' போடுவார்.**

- அமலாக்கத்துறை அதிகாரி இலஞ்சமே வாங்கவில்லை, தமிழக அரசு பொய் வழக்கு **– உச்சநீதிமன்றத்தில் அமலாக்கத்துறை**

**அவர் தனக்காக அந்த பணத்தை வாங்கவில்லை, ஒட்டுமொத்த அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கும் பகிர்ந்து கொடுக்க வாங்கிய 'உத்தம தியாகி'**

# தேர்தல் பத்திரங்கள் மூலம் மெகா மோசடி

# பாஜகவின் ஊழல்கள் அம்பலமாகின

தேர்தல் பத்திரங்கள் என்ற மோசடித் திட்டத்தை உச்ச நீதிமன்றம் ரத்து செய்து, ஒட்டுமொத்த விவரங்களையும் வெளியிட எஸ்.பி.ஐ.-க்கு சமீபத்தில் உத்தரவிட்டது. அதன்படி எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு பத்திரங்களை வாங்கின, எந்தெந்த கட்சிகள் எவ்வளவு நன்கொடை பெற்றன என்ற விவரங்களை எஸ்.பி.ஐ. மார்ச் 13ஆம் தேதி வெளியிட்டது. 2018ஆம் ஆண்டிலேயே தேர்தல் பத்திரங்கள் நடைமுறைக்கு வந்திருந்தாலும் 2019 ஏப்ரல் 12 முதல் நடப்பாண்டு ஜனவரி 11ஆம் தேதி வரையிலான விவரங்கள் மட்டுமே முதலில் வெளியிடப்பட்டன. எஸ்.பி.ஐ. தரப்பில் கூடுதல் அவகாசம் கேட்டு, அதற்கு அனுமதிக்க முடியாது என உச்சநீதிமன்றம் தலையில் கொட்டிய பின்பே, இந்த அரைகுறை விவரங்களும் வெளியிடப்பட்டன.

தொடக்கம் முதலே இந்த விவகாரத்தில் பாஜகவை காக்கும் நோக்கிலேயே எஸ்.பி.ஐ. செயல்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. அதற்கேற்ப, எந்த கட்சிக்கு எந்த நிறுவனம் நிதி கொடுத்தது என்பதை கண்டுபிடிப்பதை தடுக்க தேர்தல் பத்திரத்தின் எண் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, “தேர்தல் பத்திர வழக்கில் SBI-ன் செயல்பாடு நேர்மையானதாக இல்லை. தேர்தல் பத்திர வழக்கின் தீர்ப்பை செயல்படுத்துவதில் எஸ்.பி.ஐ. வங்கியின் அணுகுமுறை சரியில்லை. உச்சநீதிமன்றத்தின் முழு தீர்ப்பை செயல்படுத்த வேண்டியது எஸ்.பி.ஐ. வங்கியின் முழு கடமை”என்று கண்டித்தது.

“தேர்தல் பத்திர ரகசிய எண்ணை வெளியிடுவது தொடர்பாக மார்ச் 21ம் தேதி மாலை 5 மணிக்குள் எஸ்.பி.ஐ. பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். எந்த தரவுகளும் விடுபடவில்லை என்று எழுத்துப்பூர்வமாக எஸ்.பி.ஐ.” உறுதி செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. பாஜக மூடி மறைக்க முயன்ற மெகா ஊழல் உச்சநீதிமன்றத்தின் அதிரடியான உத்தரவுகளால் மக்கள் மத்தியில் அம்பலமாகியிருக்கிறது.

ஏற்கெனவே ரஃபேல் ஊழல், துவாரகா எக்ஸ்பிரஸ் ஊழல், சுங்கச்சாவடி ஊழல், ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டு ஊழல் என பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் பாஜக அரசின் மீது சுமத்தப்பட்டிருந்தாலும், ஊழலே இல்லாத ஒரே அரசு என அவர்களுக்கு அவர்களாகவே பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்கள். இனி அந்த கதையாடல்கள் மக்கள் முன் எடுபடாது என்ற அளவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் நடைபெற்ற மெகா ஊழல் வெளியாகி, வட



மாநிலங்களிலும் பாஜகவுக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது.

மார்ச் 2018 முதல் ஜனவரி 2024 வரையிலான காலத்தில் ஒட்டுமொத்தமாக 16,492 கோடி ரூபாய் மதிப்பிலான தொகையை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் நன்கொடையாகப் பெற்றுள்ளன. இதில் பாரதிய ஜனதா கட்சி மட்டுமே 8,252 கோடி ரூபாயைப் பெற்றுள்ளது. ஒட்டுமொத்த கட்சிகள் பெற்ற நன்கொடையில் பாஜக மட்டுமே 50 விழுக்காட்டுக்கு அதிகமாகப் பெற்றுள்ளது. மற்ற அனைத்து கட்சிகளும் சேர்ந்து 50 விழுக்காடுக்கும் குறைவான நன்கொடையைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

இதில் பல நிறுவனங்கள் பாஜக அரசின் கீழ் இயங்கும் வருமான வரித்துறை, அமலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகள் சோதனை நடத்திய சில நாட்களில் கோடிக்கணக்கான ரூபாயை நன்கொடையாக வாரி இறைத்துள்ளன. ரெய்டு நடத்தி மிரட்டியே ஒவ்வொரு நிறுவனங்களிடமும் பாஜக நன்கொடையை வாங்கியிருக்கிறது என்பதையே இவை உணர்த்துகின்றன.

கொரோனா பேரிடர் காலத்தில் தடுப்பூசி தேவை மிக அதிகமாக இருந்த காலகட்டத்தில், செங்கல்பட்டில் உள்ள ஒன்றிய அரசின் தடுப்பூசி வளாகத்தை செயல்பாட்டுக்கு கொண்டுவர தமிழ்நாடு அரசு வலியுறுத்தியது. ஆனால் கடைசிவரை அதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. அதற்கு நேர்மாறாக சீரம் நிறுவனத்திற்கு தடுப்பூசி தயாரிக்க அனுமதி கொடுக்கப்பட்டு, பல்வேறு நாடுகளுக்கும் அந்நிறுவனம் ஏற்றுமதி செய்தது. 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் இந்நிறுவனம் 500 கோடி ரூபாய்க்கு மேல் தேர்தல் பத்திரங்களை வாங்கி நன்கொடை கொடுத்துள்ளது.

பாஜக ஆட்சியானது அம்பானி, அதானி என்ற இருவருக்கான ஆட்சி மட்டும்தான் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அடிக்கடி கூறுவார். அதை நிரூபிக்கும் விதமாக அம்பானி, அதானியின் நேரடி நிறுவனங்கள் ஒன்று கூட ஒரு தேர்தல் பத்திரத்தை கூட வாங்கவில்லை. எந்தெந்த நிறுவனங்களிடம் இருந்து நன்கொடை வாங்கியிருக்கிறோம் என்ற விவரங்களை திமுக, அதிமுக, தேசியவாத காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் அறிவித்துவிட்டன. ஆனால் நாட்டிலேயே அதிகபட்ச நன்கொடை வாங்கிய பாஜக இதுவரை தேர்தல் ஆணையத்திடம் அந்த விவரங்களை தெரிவிக்கவில்லை. இதிலிருந்தே பாஜகவின் மோசடிகளை மக்கள் புரிந்துகொள்ளலாம்.

- ஃபியூச்சர் கேமிங் நிறுவனத்தின் ரூ.409 கோடி மதிப்பிலான சொத்துக்களை 02.04.2022 அன்று அமலாக்கத்துறை முடக்கியது. 07.04.2022 அன்று தேர்தல் பத்திரங்களை இந்நிறுவனம் வாங்கியுள்ளது.
- அரவிந்தோ பார்மா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் 11.04.2022 அன்று அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். 15.04.2022 அன்று இந்நிறுவனம் தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளது.
- சீரடி சாய் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தில் 20.12.2023 அன்று வருமான வரித்துறை சோதனை நடத்தியது. 11.01.2024 அன்று இந்நிறுவனம் தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளது.
- டாக்டர் ரெட்டீஸ் நிறுவனத்தில் 11.11.2023 அன்று வருமான வரித்துறை சோதனை நடத்தியது. 17.11.2023 அன்று இந்நிறுவனம் தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளது.
- கல்பதரு குழுமத்தில் 04.08.2023 அன்று வருமான வரித்துறை சோதனை நடத்தியது. 10.10.2023 அன்று இந்நிறுவனம் தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளது.
- மைக்ரோ லேப்ஸ் நிறுவனத்தில் 14.07.2023 அன்று வருமான வரித்துறை சோதனை நடத்தியது. 07.10.2023 அன்று இந்நிறுவனம் தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளது.
- டோரண்ட் பவர் நிறுவனம் 10.01.2024 அன்று தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளது. அதற்குப் பலனாக 07.03.2024 அன்று 1.540 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களை பெற்றுள்ளது.
- APCO இன்ஃப்ரா நிறுவனம் 10.01.2022 அன்று தேர்தல் பத்திரங்கள் வாங்கியுள்ளது. 24.01.2024 அன்று வெர்சோவா - பாந்த்ரா கடல் இணைப்புத் திட்டத்திற்கான 9,000 கோடி ரூபாய்க்கான ஒப்பந்தத்தை இந்நிறுவனம் பெற்றுள்ளது.
- ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனம் 21.03.2022 அன்று வருமான வரித்துறை சோதனையை எதிர்கொண்டது. 07.10.2022 அன்று தேர்தல் பத்திரங்கள் வாங்கியுள்ளது.
- யசோதா மருத்துவமனைக்கு சொந்தமான இடங்களில் 26.12.2020 அன்று வருமான வரித்துறை சோதனை நடத்தியது. 2021 ஏப்ரல் முதல் அக்டோபர் வரை இந்நிறுவனம் தேர்தல் பத்திரங்கள் வாங்கியுள்ளது.

35 மருந்து நிறுவனங்கள் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளன. அதில் 7 நிறுவனங்கள் தரமற்ற மருந்துகளை தயாரிப்பதாக விசாரணைக்கு உள்ளான பிறகு, தேர்தல் பத்திரங்களை வாங்கியிருக்கின்றன. பாஜகவைப் பொறுத்தவரையில் தரமற்ற மருந்துகளை தயாரிப்பது தவறல்ல, நன்கொடை கொடுக்காமல் தயாரிப்பதுதான் தவறு.

## குருவரெட்டியூர் மகேஸ்வரி காலமானார்
## பெண்கள் முன்னின்று இறுதி நிகழ்வுகளை செய்தனர்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் குருவரெட்டியூர் தோழர் நாத்திகசோதி அவர்களின் இணையர் தோழர் மகேஸ்வரி அவர்கள் 13.03.2024 காலை மறைவுற்றார். அவரது கண்கள் ஈரோடு அரசன் கண் மருத்துவமனைக்கு தானமாக வழங்கப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழக பெண் தோழர்கள் மறைந்த அம்மையாரின் உடலை சுமந்து சென்று இறுதி ஊர்வலத்தை தலைமை ஏற்று நடத்தினர்.

இறந்தவர்களின் உடலை பெண்கள் சுமக்க கூடாது, சுடுகாடு வரை பெண்கள் வர கூடாது என்ற மூடத்தனத்தை மறுத்து. மத, ஜாதிய சடங்குகளை மறுத்து பெண்களே முன்னின்று இறுதி நிகழ்வுகளை நடத்தினர். இந்நிகழ்வு குருவரெட்டியூர் பகுதி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.



இறுதி நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் தோழர் கொளத்தூர் மணி மற்றும் திராவிடர் கழக, திராவிடர் விடுதலைக் கழக, மாநில மாவட்ட நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக மறைந்த தோழர் மகேஸ்வரி அவர்களின் பட திறப்பும் நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்றது. கழக மாநில பொறுப்பாளர்கள் இரங்கல் உரையாற்றினார்கள். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் பல்வேறு நினைவுகளை பகிர்ந்ததோடு பெரியார் இயக்கத்தின் பண்புகளை விளக்கி இரங்கல் உரையாற்றினார்.

முடிவில் தோழர் நாத்திக சோதி அவர்கள் தன் நினைவுகளை பகிர்ந்து கலந்து கொண்ட தோழர்களுக்கு நன்றி கூறினார்.

கோவையில் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கில் கழகத் தலைவர் ஆற்றிய உரையின் தொடர்ச்சி அடுத்தவார இதழில் இடம்பெறும்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், ஆத்தூர், மதுரையில் பரப்புரைகள் தீவிரம்

**கள்ளக்குறிச்சி** : கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு முதல்கட்ட பரப்புரைக் கூட்டமானது மார்ச் 15,16 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

மார்ச் 14ஆம் தேதி மூரார்பாளையம், கள்ளக்குறிச்சி மந்தைவெளி, சின்ன சேலம் பேருந்து நிலையம், நைனார்பாளையம் பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.




இதற்கு கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் கா.மதியழகன் தலைமை தாங்கினார். இதில் மக்கள் அதிகாரம் கள்ளக்குறிச்சி மாவட்டப் பொறுப்பாளர் ராமலிங்கம், சின்ன சேலம் விசிக ஒன்றியச் பொருளாளர் மைக்கேல், அஜித், வழக்கறிஞர் ஆனந்த், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் க. ராமர், விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன், விழுப்புரம் மாவட்டச் செயலாளர் சாக்ரடீசு, விசிக தலித் சந்திரன் தபெதிக மாவட்டச் செயலாளர் செ.பிரபு ஆகியோர் பரப்புரைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

இரண்டாவது நாளாக 16.3.2024 அன்று மு.நாகராஜ் தலைமையில் கூட்டம் தொடங்கியது. புதுப்பட்டு பேருந்து நிலையம், சங்கராபுரம், வாணாபுரம் பகண்டை கூட்டுச்சாலை, கடுவனூர் பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது. இதில் மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, இரா. கார்மேகம், மு நாகராஜ், மா.குமார், ரா.ஜீவா, திருவண்ணாமலை மாவட்ட கழக ஒருங்கிணைப்பாளர் இரா. வீரமணி, ஏ. ஜெயப்பிரகாஷ் பரமநத்தம் ராவணன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

**மதுரை** : மதுரை மாவட்டக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு முதல்கட்ட பரப்புரைக் கூட்டமானது மார்ச் 11,12,13 ஆகிய தேதிகளில் மதுரை டி.எம்.கோர்ட், மேலப் பொன்னகரம், பெத்தானியபுரம், அவனியாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றது.

இதில் திராவிட முன்னேற்றக் கழகம், ஆதித்தமிழர் பேரவை, தமிழ்ப் புலிகள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தமிழ் தேசக் குடியரசு இயக்கம், மக்கள் சட்ட உரிமை இயக்கம், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தின் பாராட்டி பெத்தானியபுரம் ஆட்டோ ஓட்டுநர்கள் கழக செயல்வீரர்களுக்கு பயனாடை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர். மேலப் பொன்னகரத்தில் நடைபெற்ற கூட்டத்தை கவனித்த பொதுமக்கள் கழகத் தோழர்களுக்கு தேனீர் வழங்கியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

**ஆத்தூர்** : சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆனைக்கல் மேடு, மணிக்கூண்டு, உடையம்பட்டி, நரசிங்கபுரம், முல்லைவாடி, ராஜேந்திரா பேக்கரி உள்ளிட்ட ஆறு இடங்களில் பிப்ரவரி 25ஆம் தேதி தொடங்கி மார்ச் 15 வரை நடைபெற்றது.

கூட்டத்தின் தொடக்க நிகழ்வாக பெரியார் விழுதுகள் ரிஷிவிந்தன் - அரவிந்தன் ஆகியோரின் பகுத்தறிவுப் பாடல்கள் மற்றும் மகேந்திரன் - கணபதி குழுவின் அரசியல் நையாண்டி நடைபெற்றது.

செல்வராஜ், வெங்கடேஷ், கார்த்திகேயன் ஆகியோர் பரப்புரைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினர். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்** : நாச்சியார்கோயில் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் நாச்சியார் கோயில் வடக்கு வீதியில் 14.3.3024 வியாழன் மாலை 6 மணியளவில் குடந்தை ஒன்றிய அமைப்பாளர் சா.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது, சோலை மாரியப்பன் வரவேற்புரையாற்றினார்.

தஞ்சை மாவட்டச் செயலாளர் கு. பாரி, மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம், குடந்தை திராவிடர் கழக மாநகரத் தலைவர் வழக்குரைஞர் ரமேசு ஆகியோர் கருத்துரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து கழக பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் சிறப்புரையாற்றினார்.

நிறைவாக திருவிடைமருதூர் ஒன்றிய அமைப்பாளர் மா. கரிகாலன் நன்றி கூறினார். இதில் திவிக ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளர் க. சொ. சிவசுப்பிரமணியன், மனிதநேய மக்கள் கட்சிப் பொறுப்பாளர் இராஜ் முகமது, மக்கள் நலக் கூட்டணி ஒருங்கிணைப்பாளர் சாத்தையன், திராவிடர் கழகப் பொறுப்பாளர்கள் வீர.கோவிந்தராஜன், அரங்க. இராசா, வே. குணசேகரன், அ. சங்கர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## சென்னை: புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்

சென்னையைச் சேர்ந்த தௌஃபிக் மற்றும் லியோ மார்ஷல் ஆகிய இரு இளைஞர்கள் 02.03.2024 அன்று சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.



சென்னை கிண்டியை சேர்ந்த ஐ.டி ஊழியரான அபிநந்தன் கிருஷ்ணன், 17.03.2024 அன்று சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி தலைமையில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார். உடன் அருண்குமார், அருண்கோமதி, அன்னூர் விஷ்ணு.

இந்நிகழ்வு இராயப்பேட்டை வி.எம் தெரு பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது.

## கோவை ஃபாருக்கின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல்

**கோவை** : இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட கோவை மாநகர் மாவட்டக் கழக செயல்வீரர் தோழர் ஃபாரூக்கின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் 16.03.2024 அன்று காந்திபுரம் பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் இந்திய முற்போக்கு கூட்டியக்கத் தலைவர் யூ.கலாநாதன் அவர்களின் படத்தை தபெதிக பொதுச்செயலாளர் கு.இராமகிருஷ்ணன் திறந்து வைத்தார். நிகழ்வை ததிசுக தலைவர் நேருதாசு தலைமை தாங்கினார். இதில் தோழமை இயக்கத்தினர் கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினர்.

ஜின்னா மாச்சு, வழக்கறிஞர் PUCL பாலமுருகன் ஆகியோர் ஃபாரூக் வழக்கு நடைபெறுவது குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் மறைந்த தோழர் ஃபாரூக் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் கழக சார்பில் மாநகரத் தலைவர் நிர்மல் குமார், செயலாளர் வெங்கடேசன், அமைப்பாளர் கிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் புரட்சித்தமிழன், சதீஷ், இராஜாமணி, நவீன், அறிவுக்கனல் கலந்து கொண்டனர்



திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியம், நாராயணக் குப்பத்தைச் சேர்ந்த இரா. வீரமணி - ஏ.கார்ஷீலா ஆகியோரின் இணையேற்பு விழா 22.02.2024 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted March 22, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran